21st November 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த யோசனை சற்றேறக் குறைய கடந்த பத்தாண்டுகளாகப் பரிசீலிக்கப்பட்டு வந்திருக் கிறது. சில சமயங்களில் விபத்தைத் தடுக்க வேகமாகவும் ஓட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி 'சீல்' செய்து விட் டாலும் விபத்து ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகை யால்தான் இந்த 'சீல்' செய்யப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விபத்தில் பாதிக்கப்பட்டவரு டைய குடும்பத்திற்குச் சர்க்கார் உதவி செய்கிறதா? அல்லது விபத்தை உண்டாக்கியவரிடம் இருந்து உதவி பெறப்படுகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கென்று தனியாக ஒரு சட்டம் இருக்கிறது. அதன் பிரகாரம் காம்பென்சேஷன் கொடுக் கப்பட்டு வருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : மோட்டார் விபத்துக்கள் அதிக மாக இருப்பதன் காரணமாக இறக்கின்றவர்கள் தொகை அதிக மாக இருக்கிறது என்ற காரணத்தால் மோட்டார் சட்டத்தைத் திருத்தி குறைந்தபட்ச தண்டனையை அதிகமாக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விபத்துக்கள் ஏற்படுவ தெல்லாம் தனிப்பட்ட ஒருவருடைய தவறினால்தான் என்று நினைப்பது சரியல்ல. தவிர்க்க முடியாதபடி விபத்துக்கள் ஏற் படும்போதெல்லாம் யார் மீது குற்றம் இருந்தாலும் சரி, மோட் டார் ஓட்டுபவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொன்னால் போக்குவரத்து வளர்ச்சியடைய முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர் களே, லாரிகளின் மூலமாக ஏற்படும் விபத்துக்களுக்குக் காரணம் லாரி டிரைவர்களுடைய தூக்கமின்மையும், நீண்ட தொலைவு, 300, 400 மைல்களுக்கு மேல் ஒரே டிரைவரே ஓட்டிச் செல்ல வேண்டிய நிலைமையுந்தான் என்று சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு தொழிலாளி எத்தனை மணி நேரம் ஓட்டவேண்டும் என்பதற்கெல்லாம் சட்டம் இருக் கிறது. அதை மீறி ஓட்டுகிறார்கள் என்றால் அவர்கள் மீது நட வடிக்கை எடுக்க முடியும். தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் பட்ட உரிமைகளையெல்லாம் அவர்கள் தங்களுடைய சங்கங்களின் மூலமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதற்கு என்று சர்க்கார் இன்ஸ்பெக்டரைப் போட்டுக் கண்காணிக்க முடியாது.

Bridge across South Pennaiar

* 416 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the public of Arasampatty village in Krishnagiri taluk have requested the Government for the construction of a bridge across the South Pannaiar near Arasampatty village in the Arasampatty-Thattarahally road, originally called as Barur-Avathuvady road in Salem district: and

(b) if so, the action taken thereon?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) 22—3—1963-ல் அரசம்பட்டி கிராமவாசிகள் சேலம் கலெக்டரிடம் பல முறையீடுகளைச் செய்து கொண்டபோது, அரசம்பட்டி கிராமத்திற்கருகில் பாரூர்-ஆவத்த வாடி சாலையில் தென்பெண்ணையாற்றின் குறுக்காக மூழ்கு பாலம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

(இ) சேலம் கலெக்டர் இது விஷயமாக கிருஷ்ணகிரி (நெடுஞ் சாலைகள்-கிராமப்பணிகள்) டிவிஷனல் எஞ்சினியரைக் கலந்தாலோசித்தார். அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் எதிலும் மேற்படி பால வேலை சேர்க்கப்படவில்லை என்று டிவிஷனல் எஞ்சினியர் அறிவித்தார். இதை கலெக்டர் அரசம்பட்டி கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்கும் தெரிவித்திருக்கிறார்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தப் பாலத்தைக் கட்டுவது பற்றிப் பரிசீலித்து அதைக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இதை நான்காவது திட்ட காலத்தில்தான் பரிசீலிக்க வேண்டும்.

அரிசிக் கொள்முதல்

*417 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசி மில்காரர்கள் சர்க்காருக்கு தங்கள் கொள்முதலில் 10 சதவீதம் கொடுத்து வந்ததை நிறுத்தி விட்டார்கள் என்பது உண்மையா?

(இ) அப்படியானால், சர்க்கார் தங்கள் இலக்கை எப்படி பூர்த்தி செய்யப்போகிறது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) இல்லை.

(இ) 1—10—1963 முதல் 31—12—1963 வரை உள்ள கால அளவில் பிரத்தியேக ஏற்பாட்டின்படி அரசாங்கத்திற்கு அரிசி சப்ளை செய்ய அரிசி மில்காரர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். கொள்முதல் செய்ய உத்தேசித்துள்ள ஒரு லட்சம் டன் அரிசியில் 70,000 டன் அரிசி இந்த ஆண்டு இறுதிக்குள் கொள்முதல் செய்யப்பட்டு விடும்.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்த 10 சதவீதம் கொள்முதல் செய்தால் சர்க்காருடைய குறியீட்டு எண் எட்டிவிடுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்த மூன்று மாதத்திற்குக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். இதைக்கொண்டு பார்த்தால் 20,000 டன் வரும்.